செய்தி வெளியீடு எண்: 610 நாள்: 25.09.2007

## உலகச்சுற்றுலா விழா 27.9.2007 அன்று காஞ்சிபுரத்தில் நடைபெறுகிறது

ஒவ்வொரு ஆண்டும் உலகச் சுற்றுலா விழா செப்டம்பர் மாதம் 27 ஆம் தேதி கொண்டாடப்படுகிறது. சுற்றுலாவின் மேன்மையை உணர்த்துவதற்கும், உலகச் சுற்றுலாப் பயணிகளை ஒருங்கிணைப்பதற்கும், இவ்விழா குறியீடாகத் திகழ்கிறது.

தமிழகம் பல்வேறு வகையான சுற்றுலாத் தலங்களைத் தன்னகத்தே பெற்றுள்ள மாநிலம். ஆழமான கடலிலிருந்து, உயரமான மலைகள் வரை முற்றிலும் மாறுபட்ட அனுபவங்களைத் தரக்கூடிய சுற்றுலாத் தலங்கள் அதிகம் கொண்டுள்ள மாநிலம் தமிழ்நாடு. இம்முறை சுற்றுலா - "பெண்கள் முன்னேற்றத்தின் நுழைவாயில்" என்ற கருப்பொருளில் இந்த விழா உலகமெங்கும் கொண்டாடப்படுகிறது. தமிழகத்தில் மாநில அளவிலான உலகச் சுற்றுலா விழா காஞ்சிபுரம் மாவட்டத்தில் 27.09.2007 அன்று தொடங்கி 30.09.2007 வரை நான்கு நாட்கள் சிறப்பாக நடைபெறவுள்ளது. இவ்விழாவில் பெருமளவில் பயணிகளை ஒருங்கிணைத்து இவ்வாண்டின் கருப்பொருளை நிறைவு செய்யும்பொருட்டு நிகழ்ச்சிகள் வடிவமைக்கப்பட்டுள்ளன.

இவ்விழாவில் தமிழகத்தின் பாரம்பரிய உணவு வகைகளைக் கொண்ட உணவுத் திருவிழா, கிராமிய விளையாட்டுக்கள் போன்ற நிகழ்ச்சிகள் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளன. இதுதவிர பெண்களுக்காக கோலப்போட்டி, பூத்தொடுத்தல் போட்டி, பாரம்பரிய ஆடை அலங்காரப்போட்டி, சிகை அலங்காரப் போட்டி போன்ற நிகழ்ச்சிகளும், இருபாலருக்கும் கயிறு இழுக்கும் போட்டி, இசை நாற்காலிப் போட்டிகளும் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளன. கல்லூரி மாணவர்களிடையே சுற்றுலா குறித்த விழிப்புணர்ச்சியை ஏற்படுத்தும் பொருட்டு, பேச்சுப்போட்டி, நாடகப் போட்டி மற்றும் நடன நிகழ்ச்சிகள் அன்னை அஞ்சுகம் கலை அரங்கத்தில் நடைபெற உள்ளன.

நிகழ்ச்சியின் முதல்நாளான 27.9.2007 அன்று "விருந்தினர் போற்றுதும், விருந்தினர் போற்றுதும்": என்கின்ற தத்துவத்தை அடிப்படையாகக் கொண்டு சுற்றுலா விழிப்புணர்வுப் பேரணி, காஞ்சிபுரம் காந்தி ரோடு தேரடியில் தொடங்கி, அன்னை அஞ்சுகம் விளையாட்டு அரங்கம் வரை நடைபெற உள்ளது. இந்தப் பேரணியில், யானைகள், குதிரைகள், தொன்மையான இசைக்கருவிகளின் இசை நிகழ்ச்சி, தமிழக நாட்டுப்புறக் கலைநிகழ்ச்சிகள் ஆகியவை இடம்பெறுவதோடு கல்லூரி, பள்ளி மாணவ, மாணவியர் சுற்றுலா குறித்த தகவல்களைத் தாங்கிய அட்டைகளைக் கைகளில் ஏந்தி வருவர். அன்று அன்னை அஞ்சுகம் திருமண மண்டபத்தில் காலை 10 மணி அளவில் வாடகை ஊர்தி ஓட்டுநர்கள், தாணி

ஓட்டுநர்கள், விடுதி உரிமையாளர்கள், வர்த்தகர்கள் ஆகியோரைச் சிறப்பு அழைப்பாளர்களாக அழைத்து "விருந்தினர் போற்றுதும், விருந்தினர் போற்றுதும்" திட்டத்தின்கீழ் பல்வேறு சுற்றுலாப் பயணிகளிடம் மேற்கொள்ள வேண்டிய நெறிமுறைகள் பற்றிய கருத்தரங்கம் நடத்தப்பட உள்ளது. 27.9.2007 மாலை 6.00 மணி அளவில் மாண்புமிகு தொழிலாளர் நலத்துறை அமைச்சர் திரு.தா.மோ. அன்பரசன் அவர்கள் மாநில அளவிலான உலகச் சுற்றுலா விழாவினைத் தொடங்கி வைத்து உரையாற்ற உள்ளார். காஞ்சிபுரம் மாவட்ட ஆட்சித் தலைவர் திரு.பிரதீப் யாதவ், இ.ஆ.ப., அவர்கள் விழாவிற்குத் தலைமையேற்க உள்ளார். நாடாளுமன்ற-சட்டமன்ற உறுப்பினர்கள், உள்ளாட்சி மன்றங்களின் தலைவர்கள் வாழ்த்துரை வழங்க உள்ளார்கள். அன்று மாலை கிராமிய நடன நிகழ்ச்சிகளும் நடைபெறவிருக்கின்றன. தொடக்க விழா நிகழ்ச்சிக்குப் பிறகு சுற்றுலாவின் பயன் - "தனி மனித மகிழ்ச்சியா – சமுதாய வளர்ச்சியா" என்ற தலைப்பில் டாக்டர் கு. ஞானசம்பந்தன் தலைமையில், அகில இந்திய வானொலி புகழ் டாக்டர் சுந்தர ஆவுடையப்பன் குழுவினர் கலந்துகொள்ளும் பட்டிமன்றம் நடைபெறும். அதற்குப் பிறகு பரதநாட்டிய நிகழ்ச்சி நடைபெறும்.

28.9.2007 அன்று மாலை 4.00 மணி முதல், டாக்டர் விஜயலட்சுமி நவநீதகிருஷ்ணன் குழுவினர் பங்கேற்கும் கிராமியக் கலை நிகழ்ச்சி நடைபெறும். 29.9.2007 அன்று மாலை 4.00 மணி முதல் கலைமாமணி சந்திரா தண்டாயுதபாணி குழுவினர் பங்கேற்கும் பரதநாட்டிய நிகழ்ச்சி நடைபெறும். பிறகு சின்னத்திரை, திரைப்படப் புகழ் நடிகர்கள் கலந்துகொள்ளும் நகைச்சுவை நிகழ்ச்சியும், பின்னர் பாவைக்கூத்தும் நடைபெறும்.

30.09.2007 அன்று ஞாயிற்றுக்கிழமை வெளிநாட்டு சுற்றுலாப் பயணிகள் "புஞ்சரசந்தாங்கல்" என்ற கிராமத்திற்கு மாட்டு வண்டியில் அழைத்துச் செல்லப்பட்டு கிராமத்தைச் சுற்றிக் காட்டுவதோடு, தமிழகத்தின் பாரமம்பரிய உணவுகளை அவர்கள் சுவைத்து மகிழவும் ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன. நாள்தோறும் உலகச்சுற்றுலா விழா நிகழ்ச்சியில் பங்கு பெற வருபவர்களில் 50 நபர்கள் குலுக்கல் முறையில் தேர்வு செய்யப்பட்டு, அவர்கள் பொழுதுபோக்கு பூங்காக்களில் இலவசமாக அனுமதிக்கவும் ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

இவ்வாண்டு காஞ்சிபுரம் மாவட்டத்தில் சுற்றுலாவை பொது மக்களிடம் எடுத்துச் செல்லுகின்ற அளவிற்கு விழா நிகழ்ச்சிகள் அனைத்தும் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளன. இந்நிகழ்ச்சிகள் காஞ்சிபுரம் அன்னை அஞ்சுகம் கலை அரங்கத்திலும், ஏகாம்பரநாதர் திருக்கோயில் வாளகத்திலும் நடைபெற இருக்கின்றன. அருகிலுள்ள மாவட்டத்தில் இருக்கின்ற மக்களும் இந்த நிகழ்ச்சிகளில் கலந்துகொண்டு, சுற்றுலாவைப் பற்றி அறிந்துகொண்டு தமிழகத்திற்கு வருகின்ற சுற்றுலாப் பயணிகளிடம், நமது அன்பையும், பண்பாட்டையும் உணர்த்தும் வகையில் உபசரித்து பெருமை சேர்க்க வேண்டுமென்று கேட்டுக் கொள்ளப்படுகிறது.

உறூண்டாய் மோட்டார்ஸ், செயின்ட் கோபைன், கேபரா, ஃபாக்ஸ்கார்ன், உள்ளிட்ட தனியார் நிறுவனங்கள் இந்த விழாவில் பல்வேறு நிகழ்ச்சிகளை வழங்குவதற்கான ஏற்பாடுகளை தமிழ்நாடு சுற்றுலாத் துறை மற்றும் மாவட்ட நிர்வாகத்தினருடன் ஒருங்கிணைந்து செய்து வருகின்றன.

*********

வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9.